**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 295/2017**

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06–ம் நாள் வெள்ளிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 06.03.2026 | | |
| பெயர்: | ராஜேந்திரன்<br>(PW–3 Chief ) | தகப்பனார் பெயர்: | சுப்ரமணியன் |
| கிராமம்: | வழுதலைக்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 65/2026 |

**<u>முதல் விசாரணை : 06.03.2026</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க அழைப்பாணை வந்தது. அதன்பேரில் நான் சாட்சியமளிக்கிறேன். வாதி ராஜேந்திரன் எனது ஊரைச் சேர்ந்தவர். வாதியின் தகப்பனார் சம்மந்தத்தை தெரியும். அவர் எந்த வருடம் இறந்தார் என்பது ஞாபகமில்லை. வா.சா.ஆ.12 ஆவணத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த **கையெழுத்து வா.சா.ஆ.20** ஆகும். அதில் எனது தகப்பனார் பெயர் மற்றும் முகவரியை நானே எனது கையால் எழுதினேன். எனது ஊரைச் சேர்ந்த காத்தமுத்துவை தெரியும். வா.சா.ஆ.12 ஆவணத்தை யார் எழுதினார் என்பது ஞாபகமில்லை. வாதி ராஜேந்திரன் என்னிடம் வா.சா.ஆ.12 ல் கையெழுத்து வாங்கினார்.

சம்மந்தம் உயில் எழுதியதும், கையெழுத்து செய்ததும் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் அவர் கையெழுத்து செய்தது எனக்கு தெரியாது. ராஜேந்திரனுக்கும் எனக்கும் சமீப காலமாக பகையுணர்வு ஏற்பட்டு பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் ராஜேந்திரனுக்கும் சுமூக உறவு

இல்லாத காரணத்தால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவிடும்படி வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.